MAY 2022 **P/ID 35319/PTL2J**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. பனுவல் - பொருள் கூறுக.

2. தோலாமொழித் தேவர் இயற்றிய காப்பியம் எது?

3. திருமுருகாற்றுப்படை - பெயர்க் காரணம் கூறுக.

4. பாட்டுடைச் செய்யுள் - சொற்பொருள் சுட்டுக.

5. தாக்குரவு என்றால் என்ன?

6. பாஞ்சாலி சபத முன்னுரையின் சிறப்பு யாது?

7. திருக்குறளின் வேறு பெயர்கள் எவை?

8. குடும்பவிளக்கின் பெருமை என்ன?

9. பட்டறிவு என்பது யாது?

10. இலக்கிய உணர்ச்சியைத் தொல்காப்பியம் எந்தப் பெயரால் சுட்டுகிறது?

11. சிறுகதை - பெயர்க் காரணம் எழுதுக.

12. மக்கள் கலை இலக்கியங்கள் எனத்தக்க சிற்றிலக்கியங்கள் எவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. 'இலக்கியத்திலிருந்து எடுபடும் இலக்கணம்' - விளக்குக.

14. முருகியல் (AESTHETIC) குறித்து எழுதுக.

15. சமுதாய வெளிப்பாடாக இலக்கியம் அமையுமாற்றை நிறுவுக.

16. சிலப்பதிகாரத்தின் பாவிகம் யாது?

17. சிற்றிலக்கியப் படைப்பில் முதன்மை பெற்றது பாடுபொருளா? வடிவமா?

18. திருக்குறளின் காமத்துப்பால் அறநூலா? அக இலக்கியமா?

19. இடைக்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சியை மதிப்பிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. தொல்காப்பியம் சுட்டும் செய்யுள் உறுப்புகளைப் பட்டியலிடுக.

21. இலக்கியத் தோற்றம் பற்றிய ஐந்து வகைக் கொள்கைகளை விளக்குக.

22. ‘இலக்கியத் தளத்தில் படைப்பாளர், படிப்பாளர், திறனாய்வாளர் என்னும் மூவரும் இணைந்து செயல்பட வேண்டும்’ என்னும் கூற்றை மதிப்பிடுக.

23. இன்றைய நிலையில் அதிகக் காப்பியங்கள் தோன்றாததேன்?

24. தமிழ்ப் பக்தி இலக்கிய மரபை விளக்குக.

———————